இரண்டாங் காலத்திற்குப்பிற்கு பொன்னூசலில் மாணிக்கக்கட்டி, மன்னுப்புகழ் ற திருப்பதிகங்கள்

## மாஸ திருநக்ஷத்ரம் — சாற்றுமுறை க்ரமம்

### 1. எம்பெருமானார்

திருப்பாவை, 2. இராமாநுச நூற்றந்தாதி 3. பல்லாண்டு—அடியோமோடும் ஸர்வதேச...இரும் 5. வாழி திருநாமம்

### 2. நம்மாழ்வார்

திருப்பாவை, 2. திருவிருத்தம்—சாற்றுமுறை, 3. பல்லாண்டு—அடியோமோடும் ஸர்வதேச...இரும். 5. வாழி திருநாமம்: மேதினியில், ஆனதிருவிருத்தம்

### 3. பெரியாழ்வார்

திருப்பாவை, 2. வானத்தெழுந்த—அங்கமல (முதல் மாதத்தில்); தடவரை—வேயர் தங்கள் (அடுத்த மாதத்தில்) 3. பல்லாண்டு—அடியோமோடும் ஸர்வதேச...இரும்.

### 4. ஆண்டாள்

திருப்பாவை, 2. நாச்சியார் திருமொழி, 3. பல்லாண்டு—அடியோமோடும், ஸர்வதேச...இரும் 5. வாழி திருநாமம்

### 5. மணவாள மாமுனிகள்

1. உபதேசரத்தினமாலை, 2. திருவாய்மொழி நூற்றந்தாதி, 3. பல்லாண்டு-அடியோமோடும், 4. ஸர்வதேச...இரும், 5. வாழி திருநாமம்

### 6. திருமங்கை யாழ்வார்

1. திருப்பாவை, 2. திருநெடுந்தாண்டகம் 3. பல்லாண்டு—அடியோமோடும் 4. ஸர்வதேச...இரும், 5. வாழி திருநாமம்.

### 7. குலசேகரப் பெருமாள்

1. திருப்பாவை, 2. பெருமாள் திருமொழி, 3. பல்லாண்டு—அடியோமோடும், 4. ஸர்வதேச...இரும்.

### அநத்யயனத்தில் திருநக்ஷத்ரம்

1. நாலாயிர திவ்யப்ரபந்த தனியன்கள், 2. உபதேசரத்தின மாலை, 3. திருவாய்மொழி நூற்றந்தாதி, 4. ஸர்வதேச...இரும், 5. வாழி திருநாமம்.

## 3. வாழி திருநாமங்கள்

[வருஷ திருநக்ஷத்ரத்தின்போது இருமுறை ஸேவிப்பது க்ரமம்]

### 1. பொய்கை யாழ்வார்

செய்யதுலா ஓணத்தில் செகத்துதித்தான் வாழியே
திருக்கச்சி மாநகரம் செழிக்கவந்தான் வாழியே
வையந்தகளி நூறும் வகுத்துரைத்தான் வாழியே
வனசமலர்க் கருவதனில் வந்தமைந்தான் வாழியே

வெய்ய கதிரோன் தன்னை விளக்கிட்டான் வாழியே
வேங்கடவன் திருமலையை விரும்புமவன் வாழியே
பொய்கைமுனி வடிவழகும் பொற்பதமும் வாழியே
பொன்முடியுந் திருமுகமும் பூதலத்தில் வாழியே.

## 2. பூதத்தாழ்வார்

அன்பே தகளி நூறும் அருளினான் வாழியே
ஐப்பசியி லவிட்டத்தில் அவதரித்தான் வாழியே
நன்புகழ்சேர் குருக்கத்தி நாண்மலரோன் வாழியே
நல்லதிருக் கடன்மல்லை நாதனார் வாழியே.
இன்புருகு சிந்தைதிரி யிட்டபிரான் வாழியே
எழில்ஞானச் சுடர்விளக்கை ஏற்றினான் வாழியே
பொன்புரையும் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே
பூதத்தார் தாளிணைஇப் பூதலத்தில் வாழியே.

## 3. பேயாழ்வார்

திருக்கண்டே னெனநூறும் செப்பினான் வாழியே
சிறந்த ஐப்பசியில் சதயம் செனித்த வள்ளல் வாழியே
மருக்கமழும் மயிலைநகர் வாழவந்தோன் வாழியே
மலர்க்கரிய நெய்தல்தனில் வந்துதித்தான் வாழியே
நெருக்கிடவே இடைகழியில் நின்றசெல்வன் வாழியே
நேமிசங்கன் வடிவழகை நெஞ்சில் வைப்போன் வாழியே
பெருக்கமுடன் திருமழிசைப் பிரான் தொழுவோன் வாழியே
பேயாழ்வார் தாளிணையிப் பெருநிலத்தில் வாழியே.

## 4. திருமழிசைப் பிரான்

அன்புடனந் தாதிதொண்ணூற் றாறுரைத்தான் வாழியே
அழகாருந் திருமழிசை அமர்ந்த செல்வன் வாழியே
இன்பமிகு தையில்மகத் திங்குதித்தான் வாழியே
எழிற்சந்த விருத்தம்நூற் றிருபதீந்தான் வாழியே
முன்புகத்தில் வந்துதித்த முனிவனார் வாழியே
முழுப்பெருக்கில் பொன்னியெதிர் மிதந்த சொல்லோன் வாழியே
நன்புவியில் நாலாயிரத் தெழுநூற்றான் வாழியே
நங்கள் பத்திசார னிரு நற்பதங்கள் வாழியே.

## 5. நம்மாழ்வார்

திருக்குருகைப் பெருமாள்தன் திருத்தாள்கள் வாழியே
திருவான திருமுகத்துச் செவ்வியென்றும் வாழியே
இருக்குமொழி யென்நெஞ்சில் தேக்கினான் வாழியே
எந்தையெதி ராசர்க் கிறைவனார் வாழியே
கருக்குழியில் புகாவண்ணம் காத்தருள்வோன் வாழியே
காசினியில் ஆரியனாய்க் காட்டினான் வாழியே
வருத்தமற வந்தென்னை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி நம்பிரான் வாழி வாழி வாழியே.

ஆனதிருவிருத்தம் நூறுமருளினான் வாழியே
ஆசிரிய மேழுபாட்டளித்த பிரான் வாழியே
ஈனமற அந்தாதி எண்பத்தே ழீந்தான் வாழியே
இலங்குதிரு வாய்மொழி ஆயிரத் தொருநூற்றிரண்டுரைத்தான் வாழியே
வானணியும் மாமாடக் குருகை மன்னன் வாழியே
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
சேனையர்கோன் அவதாரஞ் செய்தவள்ளல் வாழியே
திருக்குருகைச் சடகோபன் திருவடிகள் வாழியே.

மேதினியில் வைகாசி விசாகத்தோன் வாழியே
வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே
ஆதிகுருவாய்ப் புவனியில் அவதரித்தான் வாழியே
அனவரதம் சேனையர்கோன் அடிதொழுவோன் வாழியே
நாதனுக்கு நாலாயிரம் உரைத்த பிரான் வாழியே
நம்மதுர கவிவணங்கும் நாவீறன் வாழியே
மாதவன் பொற் பாதுகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே
மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே.

## ஸ்ரீபராங்குசாஷ்டகம்

த்ரைவித்ய-வ்ருத்தஜந-மூர்த்த-விபூஷணம் யத்
ஸம்பச்ச ஸாத்விகஜநஸ்ய யதேவ நித்யம் |
யத்வா சரண்ய மசரண்ய-ஜநஸ்ய புண்யம்
தத் ஸம்ச்ரயேம வகுளாபரணாங்க்ரி யுக்மம் || 1 ||

பக்தி-ப்ரபாவ-பவதத்புத-பாவ-பந்த-
ஸந்துக்ஷித-ப்ரணய-ஸார-ரஸௌக பூர்ண: |
வேதார்த்த-ரத்ந-நிதி ரச்யுத-திவ்ய-தாம
ஜீயாத் பராங்குச-பயோதி ரஸீம-பூமா || 2 ||

ருஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ண-த்ருஷ்ணா-தத்வமிவோதிதம் |
ஸஹஸ்ர சாகாம் யோத்ராக்ஷீத் த்ராவிடீம் ப்ரஹ்மஸம்ஹிதாம் || 3 ||

யத்கோ ஸஹஸ்ர மபஹந்தி தமாம்ஸி பும்ஸாம்
நாராயணோ வஸதி யத்ர ஸசங்கசக்ர: |
யந் மண்டலம் ச்ருதிகதம் ப்ரணமந்தி விப்ரா:
தஸ்மை நமோ வகுளபூஷண-பாஸ்கராய || 4 ||

பத்யு: ச்ரிய: ப்ரஸாதேந ப்ராப்த- ஸார்வஜ்ஞ்ய-ஸம்பதம் |
ப்ரபந்நஜந-கூடஸ்தம் ப்ரபத்யே ஸ்ரீபராங்குசம் || 5 ||

சடகோபமுநிம் வந்தே சடாநாம் புத்தி-தூஷகம் |
அஜ்ஞாநாம் ஜ்ஞாந ஜநகம் திந்த்ரிணீ-மூல-ஸம்ச்ரயம் || 6 ||

வகுளாபரணம் வந்தே ஜகதாபரணம் முநிம் |
யச் ச்ருதேருத்தரம் பாகம் சக்ரே த்ராவிட பாஷயா || 7 ||

நமஜ்ஜநஸ்ய சித்த-பித்தி-பக்தி-சித்ர-தூலிகா
பவாஹி-வீர்ய-பஞ்ஜநே நரேந்த்ர-மந்த்ர-யந்த்ரணா |
ப்ரபந்ந-லோக-கைரவ-ப்ரஸந்ந -சாரு-சந்த்ரிகா

## 6. குலசேகரப் பெருமாள்

அஞ்சனமா மலைப்பிறவி ஆதரித்தோன் வாழியே
அணியரங்கர் மணத்தூணை அடைந்துய்ந்தோன் வாழியே
வஞ்சிநக ரந்தன்னில் வாழவந்தோன் வாழியே
மாசிதனிற் புனர்பூசம் வந்துதித்தான் வாழியே
அஞ்சலெனக் குடப்பாம்பில் அங்கையிட்டான் வாழியே
அநவரத மிராமகதை அருளுமவன் வாழியே
செஞ்சொல்மொழி நூற்றைந்தும் செப்பினான் வாழியே -
சேரலர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே.

## 7. பெரியாழ்வார்

நல்லதிருப் பல்லாண்டு நான்மூன்றோன் வாழியே
நானூற்றறு பத்தொன்றும் நமக்குரைத்தான் வாழியே
சொல்லரிய ஆனிதனில் சோதிவந்தான் வாழியே
தொடைசூடிக் கொடுத்தவள்தம் தொழுந்தமப்பன் வாழியே
செல்வநம்பி தன்னைப்போல் சிறப்புற்றான் வாழியே
சென்று கிழியறுத்து மால் தெய்வமென்றான் வாழியே
வில்லிபுத்தூர் நகரத்தை விளக்கினான் வாழியே
வேதியர்கோன் பட்டர்பிரான் மேதினியில் வாழியே.

## 8. தொண்டரடிப்பொடி யாழ்வார்

மண்டங் குடியதனை வாழ்வித்தான் வாழியே
மார்கழியில் கேட்டைதனில் வந்துதித்தான் வாழியே
தெண்டிரைசூ ழரங்கரையே தெய்வமென்றான் வாழியே
திருமாலை யொன்பதிற்றைந்தும் செப்பினான் வாழியே
பண்டு திருப்பள்ளியெழுச்சி பத்துரைத்தான் வாழியே
பாவையர்கள் கலவிதனைப் பழித்தசெல்வன் வாழியே
தொண்டுசெய் துளபத்தால் துலங்கினான் வாழியே
தொண்டரடிப் பொடி யாழ்வார் துணைப்பதங்கள் வாழியே.

## 9. திருப்பாணாழ்வார்

உம்பர்தொழும் மெய்ஞ்ஞானத் துறையூரான் வாழியே
உரோகிணிநாள் கார்த்திகையில் உதித்தவள்ளல் வாழியே
வம்பவிழ்தார் முனிதோளில் வகுத்தபிரான் வாழியே
மலர்க்கண்கள் வேறொன்றில் வையாதான் வாழியே
அம்புவியில் மதிளரங்க ரகம்புகுந்தான் வாழியே
அமலனாதி பிரான்பத்தும் அருளினான் வாழியே
செம்பொனடி முடியளவும் சேவிப்போன் வாழியே
திருப்பாணன் பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே.

## 10. திருமங்கை யாழ்வார்

கலந்ததிருக் கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே
காசினியில் ஒன்குறைய் லூர்க் காவலோன் வாழியே
நலந்திகழாயிரத் தெண்பத்து நாலுரைத்தான் வாழியே
நாலைந்து மாறைந்தும் நமக்குரைத்தான் வாழியே

இலங்கெழு கூற்றிருக்கை இருமடலீந்தான் வாழியே
இம்மூன்றி லிருநூற்றிருபத் தேழீந்தான் வாழியே
வலந்திகழுங் குமுதவல்லி மணவாளன் வாழியே
வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே.

அணைத்த வேலும், தொழுத கையும், அழுத்திய திருநாமமும், ஓமென்ற வாயும், உயர்ந்த மூக்கும், குளிர்ந்த முகமும், பரந்த விழியும், இருண்ட குழலும், சுருண்ட வளையமும், வடித்த காதும், மலர்ந்த காதுகாப்பும், தாழ்ந்த செவியும், செறிந்த கழுத்தும், அகன்ற மார்பும், திரண்ட தோளும், நெளிந்த முதுகும், குவிந்த இடையும், அல்லிக்கயிறும் அழுந்திய சீராவும், தூக்கிய கருங் கோவையும், தொங்கலுந் தனி மாலையும், சாத்திய திருத்தண்டையும், சதிரான வீரக்கழலும், குந்தியிட்ட கணைக்காலும், குளிர வைத்த திருவடி மலரும், மருவலர் தம் உடல்துணியவாள்வீசும் பரகாலன் மங்கைமன்னரான வடிவே.

## 11. ஆண்டாள்

திருவாடிப் பூரத்துச் சகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கர்க்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே
மருவாருந் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

## 12. மதுரகவி யாழ்வார்

சித்திரையில் சித்திரை நாள் சிறக்க வந்தோன் வாழியே
திருக்கோளூர் வந்துதித்த செல்வனார் வாழியே
உத்தரகங் கா்தீரத் துயர் தவத்தோன் வாழியே
உயர்கதிரோன் தெற்குதிக்க உகந்துவந்தோன் வாழியே
பத்தியொடு பதினொன்றும் பாடினான் வாழியே
பராங்குசனே பரனென்று பற்றினான் வாழியே
மத்திமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி திருவடிகள் வாழி வாழி வாழியே.

## 13. பெரிய பிராட்டியார்

பங்கயப்பூ விற்பிறந்த பாவை நல்லாள் வாழியே
பங்குனியி லுத்தர நாள் பாருதித்தாள் வாழியே
மங்கையர்கள் திலகமென வந்தசெல்வி வாழியே
மாலரங்கர் மணிமார்பை மன்னுமவள் வாழியே
எங்களெழிற் சேனைமன்னர்க் கிதமுரைத்தாள் வாழியே
இருபத்தைந் துட்பொருள்மால் இயம்புமவள் வாழியே
செங்கமலச் செய்யரங்கம செழிக்க வந்தாள் வாழியே
ஸ்ரீரங்க நாயகியார் திருவடிகள் வாழியே.

## 14. சேனையர்கோன்

ஓங்குதுலாப் பூராடத் துதித்தசெல்வன் வாழியே
ஒண்டொடியாள் சூத்ரவதி யுறைமார்பன் வாழியே
ஈங்குலகில் சடகோபற் கிதமுரைத்தான் வாழியே